**பெருநகர சென்னை மாநகராட்சி**

**செய்தி வெளியீடு**

**செ.வெ.எண். 520** **நாள்: 28.09.2026**

**மாண்புமிகு நிதி, திட்டம் மற்றும் வளர்ச்சித்துறை அமைச்சர் முனைவர் நெ.மரியவில்சன் அவர்கள், தண்டையார் பேட்டை மண்டலத்தில் ரூ.1.95 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்ட பகுதி/வார்டு அலுவலகத்தினை இன்று பயன்பாட்டிற்குத் திறந்து வைத்தார்.**

பெருநகர சென்னை மாநகராட்சி, தண்டையார்பேட்டை மண்டலம், வார்டு-42க்குட்பட்ட இரத்தின சபாபதி தெருவில் 2025-26ஆம் ஆண்டு மூலதன நிதியில் ரூ.1.95 கோடி மதிப்பீட்டில் 270.12 சதுர மீட்டர் பரப்பளவில் கட்டப்பட்ட பகுதி/வார்டு அலுவலகத்தினை மாண்புமிகு நிதி, திட்டம் மற்றும் வளர்ச்சித்துறை அமைச்சர் முனைவர் நெ.மரியவில்சன் அவர்கள் இன்று (28.09.2026) பயன்பாட்டிற்குத் திறந்து வைத்தார்.

இந்த வார்டு அலுவலகக் கட்டடமானது 270.12 சதுர மீட்டர பரப்பளவில் தரைத் தளம் மற்றும் முதல் தளத்துடன் கட்டப்பட்டுள்ளது. தரைத் தளத்தில் உதவிப் பொறியாளர் அலுவலகம், சுகாதார ஆய்வாளர் அலுவலகம், முதல் தளத்தில் உதவி செயற்பொறியாளர், பகுதி அலுவலகம், ஆண், பெண் கழிவறைகள், குடிநீர் வசதி, மின் வசதி, வாகன நிறுத்துமிடம் உள்ளிட்ட உட்கட்டமைப்பு வசதிகளுடன் கட்டப்பட்டுள்ளது.

இந்நிகழ்ச்சியில், வடக்கு வட்டார துணை ஆணையாளர் திருமதி ஸ்வேதா சுமன், இ.ஆ.ப., மாமன்ற உறுப்பினர் திருமதி மோ. ரேணுகா, மண்டல அலுவலர் திரு.ஏ.ராஜ்குமார், மற்றும் மாநகராட்சி அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**செய்தி வெளியீடு: இணை இயக்குநர்/மக்கள் தொடர்பு அலுவலர்,**
**பெருநகர சென்னை மாநகராட்சி.**